Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — MBBS MS DNB MCH (vascular) — 98410 25996 — Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari — MS (Opthal) DO MBA — 9444 288784 — Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar — MBBS MS FMAS — 9445 401793 — Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R — MBBS MS MCH (vascular) — 9884 650945 — Sr Vascular Surgeon
Dr Salins R — MBBS MD — 87780 87742 — General Physician
Dr Praveena E — MBBS MS (ENT) — 9944 100443 — Sr ENT Surgeon

தொகுதி - 6 | நாளிதழ் | 4 பக்கங்கள் சென்னை, 10 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 121

புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படும் 1,364 மருந்துகளின் திருத்தியமைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை இன்று

சென்னை – 10 நவம்பர், 2026 புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படும் 1,364 மருந்துகளின் திருத்தியமைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை இன்று முதல் அமலுக்கு வருகிறது.

மத்திய ரசாயனம், உரங்கள் துறை அமைச்சகத்தின் மருந்து உற்பத்தித் துறையின் தேசிய மருந்து விலை நிர்ணய ஆணையம் 137 புற்றுநோய் தடுப்பு மருந்துகளின் அதிகபட்ச சில்லறை விலையின் வர்த்தக லாபத்தை நிர்ணயித்துள்ளது.

இது சுகாதாரம், குடும்பநல அமைச்சகத்தின் சுகாதார சேவைகள் தலைமை இயக்குநரகத்தால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்குழு 2026 அக்டோபர் 17 அன்று பரிந்துரைகளை அளித்தது. அதனுடன் இந்த மருந்துகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலை 2026 நவம்பர் 9 முதல் (இன்று) அமலுக்கு வருகிறது.

2026 நவம்பர் 8 நிலவரப்படி 85 மருந்து உற்பத்தி நிறுவனங்கள் 121 வகை புற்றுநோய் தடுப்பு மருந்துகளைக் கொண்ட 1,364 மருந்து தயாரிப்புகளுக்கான திருத்தியமைக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலைகளை சமர்ப்பித்துள்ளன. இவற்றில் 679 நிறுவனங்கள் 50 சதவீதத்திற்கும் மேல் விலையைக் குறைத்துள்ளன.

அதிகபட்சமாக 96.45 சதவீதம் வரை அதிகபட்ச சில்லறை விலை குறைக்கப்பட்டுள்ளது. இந்த விலைக்குறைப்பின் மூலம் நுகர்வோரிடம் ஆண்டுக்கு ரூ.3,540.38 கோடி சேமிக்க முடியும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா – மியான்மர் இடையேயான முதலாவது இருதரப்பு முப்படைகளின் கூட்டுப்பயிற்சி சென்னையில் நிறைவடைந்தது

சென்னை – 10 நவம்பர், 2026 இந்தியா – மியான்மர் இடையேயான முதலாவது இருதரப்பு முப்படைகளின் மனிதநேய உதவி மற்றும் பேரிடர் நிவாரண கூட்டுப் பயிற்சியான ரஹத் மித்ரா சென்னையில் 2026 நவம்பர் 5, 6-ம் தேதிகளில் நடைபெற்றது.

இந்த 2 நாள் பயிற்சியில் இந்திய ராணுவம், இந்தியக் கடற்படை, இந்திய விமானப்படை ஆகியவற்றைச் சேர்ந்த வீரர்களும், மியான்மர் பாதுகாப்புப்படையினரும் பங்கேற்றனர். பேரிடர் காலங்களில் ஒருங்கிணைந்து செயல்படும் திறனை மேம்படுத்துதல், சிறந்த நடைமுறைகளைப் பரிமாறிக்கொள்ளுதல் ஆகியவை குறித்தும் பயிற்சியில் கவனம் செலுத்தப்பட்டது.

இப்பயிற்சி, கூட்டுத் திட்டங்கள், மனிதநேய உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் செயல்பாட்டுத்திறன்களை அறிந்துகொள்வதுடன் தொடங்கியது. கடும் புயல் சூழலின்போது மேற்கொள்ளப்பட வேண்டிய ஒருங்கிணைந்த மீட்பு நடவடிக்கைகள், பேரிடர் மேலாண்மை நடைமுறைகளை குறித்து விவாதிக்கப்பட்டது. அத்துடன் இந்திய ராணுவத்தின் சார்பில் தடைகளை களைதல், தற்காலிகப் பாலங்களை அமைத்தல் தொடர்பான செயல்முறை விளக்கங்களை வீரர்கள் பார்வையிட்டனர்.

இந்திய கடற்படையின் மனிதநேய உதவி மற்றும் பேரிடர் நிவாரணம் குறித்து அறிந்துகொள்ள ஐஎன்எஸ் சுகன்யா கப்பலையும் அவர்கள் பார்வையிட்டனர்.

பயிற்சியின் இரண்டாம் நாளன்று இந்திய பாதுகாப்புப் படைகளின் சார்பில், கடல், தரை, வான்வெளி மூலம் மேற்கொள்ளப்படும் பேரிடர் நிவாரண திறன்கள் குறித்து செயல்முறை விளக்கங்கள் அளிக்கப்பட்டது. அவசர காலங்களின்போது கட்டளை, கட்டுப்பாட்டு மையங்களுக்கு உதவியாக அமையும் தரைவழி பேரிடர் மீட்பு ஏற்பாடுகள், தகவல் தொடர்பு உள்கட்டமைப்புகளை ஐஎன்எஸ் அடையார், சென்னையில் உள்ள தகவல் தொடர்பு கட்டமைப்பு மையம் ஆகியவை காட்சிப்படுத்தின.

அக்னி வீரர்களின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு: ஐஎன்எஸ் சில்காவில் நடைபெறுகிறது

சென்னை – 10 நவம்பர், 2026 இந்திய கடற்படையின் அக்னி வீரர்களின் 9- வது குழு, இந்திய கடலோர காவல்படையின் நாவிக்குகளின் பயிற்சி நிறைவு அணிவகுப்பு 2026 நவம்பர் 13 அன்று ஐஎன்எஸ் சில்காவில் நடைபெற உள்ளது.

இதில் கடற்படை தலைமைத் தளபதி அட்மிரல் கிருஷ்ண சுவாமிநாதன் தலைமை விருந்தினராக கலந்துகொண்டு அணிவகுப்பை ஆய்வுசெய்யும் அதிகாரியாக பங்கேற்கிறார்.

இந்த அணிவகுப்பு 16 வார கால பயிற்சியில் பங்கேற்ற 3,300- ம் மேற்பட்ட பயிற்சியாளர்களின் வெற்றிகரமான நிறைவைக் குறிக்கிறது.

இது ஐஎன்எஸ் சில்காவில் இருந்து பயிற்சியை நிறைவுசெய்து வெளியேறும் மிகப்பெரிய எண்ணிக்கையிலான குழு இதுவாகும்.

இப்பயிற்சியில் கல்வி, உடற்பயிற்சி, நீச்சல், அணிவகுப்பு பயிற்சி, வெளிப்புற செயல்பாடுகள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து அவர்களுடைய பணிக்கு முழு அடித்தளத்தை அளிக்கிறது.

கடமை, மரியாதை, துணிச்சல் ஆகிய கடற்படையின் முக்கிய மாண்புகளை அவர்களுக்குள் உருவாக்கச் செய்யும் அதேவேளையில், குணநலன், தலைமைத்துவம், ஒழுக்கம், நட்புறவு, குழுப்பணி ஆகியவற்றிற்கும் சமமான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இந்நிகழ்வில் பயிற்சி பெற்றவர்களின் குடும்பத்தினர் கலந்துகொள்வதோடு, பயிற்சியாளர்களுக்கு பெருமை, சாதனை ஆகியவற்றுக்கான ஒரு தருணமாக அமையும். அத்துடன் கடற்படை முன்னாள் வீரர்களும், சிறப்பு விருந்தினர்களும் கலந்துகொள்கின்றனர்.

தில்லி யமுனை ஆற்றில் சொகுசு படகு சேவை தொடங்க உள்ளது

தில்லி – 10 நவம்பர், 2026 யமுனை ஆற்றில் பொழுதுபோக்கு உல்லாசப் பயண சேவை தொடங்க உள்ளது. இதன்மூலம் தில்லி சுற்றுலாத்துறை ஒரு புதிய கவனம் பெறும். துணை நிலை ஆளுநர் சர்தார் தரண்ஜித் சிங் சாந்து, தில்லி முதலமைச்சர் ரேகா குப்தா ஆகியோர் முன்னிலையில் மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால் 2026 நவம்பர் 10 அன்று சோனியா விஹாரில் சொகுசு படகு சேவையை தொடங்கி வைக்கிறார்.

சோனியா விஹார் – ஜெகத்பூர் ஆற்றுப்பகுதியில் உருவாக்கப்பட்டுள்ள இம்முயற்சி, ஆறுகள் சார்ந்த சுற்றுலாவை ஊக்குவிப்பதையும், தேசியத் தலைநகரில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு புதிய பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

2016- ம் ஆண்டின் தேசிய நீர்வழிகள் சட்டத்தின் கீழ், யமுனை ஆறு தேசிய நீர்வழி 110 ஆக அறிவிக்கப்பட்டுள்ளது. தில்லியில் உள்ள யமுனை ஆற்றில் சோனியா விஹார் – ஜெகத்பூர் பகுதியில் பொழுதுபோக்கிற்கு ஆற்றுவழி பயணச் சேவையை மேம்படுத்துவது தேசிய நீர்வழிப் பகுதியில் ஆறுகள் சார்ந்த சுற்றுலாவிற்கு பயன்படுத்துவதற்கான ஒரு முக்கிய அம்சமாகும்.

இச்சேவை தொடங்குவதற்கு முன்பாக, கடந்த மாதம் இந்திய நீர்வழி ஆணையம், தில்லி அரசின் உயரதிகாரிகள் முன்னிலையில் சொகுசுப் படகின் சோதனை ஓட்டங்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டன.

இந்தியாவின் தூய்மையான நகரங்களைக் கௌரவிக்கும் விருதுகளை குடியரசுத்தலைவர் வழங்குகிறார்

சென்னை – 10 நவம்பர், 2026 இந்திய குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு, 2025-26-ம் ஆண்டின் சிறந்த தூய்மைப் பணிக்கான விருதுகளை, புதுதில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில், 2026 நவம்பர் 11-ம் தேதி வழங்குகிறார். மத்திய வீட்டுவசதி, நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சகம் சார்பில், தூய்மைக்கான புதிய முன்னெடுப்பு: கைகோர்ப்போம் இணைந்து தூய்மைப்படுத்துவோம் என்ற கருப்பொருளில் நடைபெற்ற தூய்மைப் பணிக்கான களஆய்வு வெற்றிகரமாக முடிவடைந்துள்ள நிலையில், இந்த விருது வழங்கும் விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மத்திய வீட்டுவசதி, நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் மனோகர் லால் முன்னிலையில் நடைபெறவுள்ள 10-வது பதிப்புக்கான விருது வழங்கும் விழாவில், தூய்மைப் பணியில் சிறந்து விளங்கியவர்களுக்கு குடியரசுத்தலைவர் திரௌபதி முர்மு விருது வழங்கி கௌரவிக்கிறார்.

மத்திய புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை சார்பில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்ட தூய்மைப் பணி

சென்னை – 10 நவம்பர், 2026 மத்திய புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை சார்பில், சிறப்பு தூய்மை இயக்கம் 6 மூலம், 2026 அக்டோபர் 2 முதல் 31- ம் தேதி வரை தூய்மைப் பணி நடைபெற்றது. தூய்மைப்பணி, அலுவலக மேலாண்மை, பொதுமக்களின் குறைத்தீர்ப்பு போன்றவை மத்திய புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையினர், தன்னாட்சி அமைப்புகள், சமூக ஆர்வலர்கள் மூலம் வெற்றிகரமான செய்து முடிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அலுவலகங்களை சுத்தம் செய்தல், குப்பைகளை தரம்பிரித்து அகற்றுதல், மின்னணு கழிவுகளை அகற்றுதல், ஆவணங்கள் மேலாண்மை மூலம் கோப்புகளை சரிபார்த்தல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்துக்கொள்ளுதல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தன்னாட்சி அமைப்புகள், துறை சார்ந்த ஊழியர்களின் கடும் உழைப்பாலும், அர்ப்பணிப்பாலும் சிறப்பு தூய்மைப்பணி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளதாக புதிய, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அசாமில் ரயில் நிலையங்களில் செல்போன் நெட்வொர்க் தரம் குறித்த சோதனை

சென்னை – 10 நவம்பர், 2026 இந்திய தொலைதொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் சார்பில், அசாம் மாநிலத்தில் உள்ள தின்சுகியா முதல் கவுகாத்தி வரையிலான ரயில் நிலையங்களில் செல்போன் நெட்வொர்க் தரம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. செல்போனில் பேசும்போது ஒலியின் தரம், சிக்னல், பதிவிறக்கம், செல்போனில் பேசிக் கொண்டிருக்கும்போது இணைப்பு துண்டிப்பு உள்ளிட்டவைகளுக்கான சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. 2 ஜி முதல் 5 ஜி வரையிலான அலைவரிசையின் தரம் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது. ரயில்வே வழித்தடத்தில் 515.9 கிலோ மீட்டர் தொலைவுக்கு நெட்வொர்க்கின் தரம் குறித்து சோதனை நடத்தினர். பிஎஸ்என்எல், ஏர்டெல் உள்ளிட்ட முன்னணி நிறுவனங்களின் செல்போன் சேவையும் பரிசோதிக்கப்பட்டது. இந்த ஆய்வின் முடிவுகள் சம்மந்தப்பட்ட செல்போன் சேவை வழங்கும் நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. செல்போன் வாடிக்கையாளர்கள் பயன்பெறும் வகையில் இந்த நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் விபரங்களை இந்திய தொலைத் தொடர்புத்துறை ஒழுங்குமுறை ஆணையத்தின் இணையதளத்தில் அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு தூய்மை இயக்கம் 6-ன் கீழ் சட்டத்துறை தூய்மைப்பணி உள்ளிட்டவற்றில் சிறப்பாக ஈடுபட்டது

சென்னை – 10 நவம்பர், 2026 சிறப்பு தூய்மை இயக்கம் 6-ன் கீழ் மத்திய சட்டம், நீதித்துறை அமைச்சகத்தின் சட்ட விவகாரத்துறை பல்வேறு தொடர் முன்முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

முன்னேற்பாடு கட்டத்தின்போது அத்துறையைச் சேர்ந்த உயரதிகாரிகளை துறைசார்ந்த பல்வேறு அலுவலகங்களுக்கு அனுப்பி தூய்மையே சேவை, சிறப்பு தூய்மை இயக்கம் 6 ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கச் செய்தது.

சிறப்பு தூய்மை இயக்கத்தின் அமலாக்கக் கட்டத்தின்போது துறையின் சார்பில், தூய்மைப் பணிகள், நிலுவையில் இருந்த குறிப்புகளை நீக்குதல், காலாவதியான ஆவணங்களை ஆய்வுசெய்து நீக்குதல், குறைதீர்ப்பு உள்ளிட்ட பணிகளில் அத்துறை ஈடுபட்டது.

மொத்தம் 27 ஆயிரத்திற்கும் அதிகமான நேரடிக் கோப்புகள் ஆய்வுசெய்யப்பட்டு அதில் 15,679 கோப்புகள் நீக்கப்பட்டன.

அதேபோல், 20,572 மின்னணு கோப்புகள் ஆய்வுசெய்யப்பட்டு 17,789 கோப்புகள் நீக்கப்பட்டன. பழைய பொருட்களை அகற்றியதன் மூலம் ரூ.4.71 லட்சம் வருவாய் கிடைத்தது.

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — MBBS MS DNB MCH (vascular) — 98410 25996 — Sr Vascular Surgeon
Dr K. Namitha Bhuvaneswari — MS (Opthal) DO MBA — 9444 288784 — Sr Eye Surgeon
Dr Sathish Rajkumar — MBBS MS FMAS — 9445 401793 — Laparoscopic & Laser Surgeon
Dr Shanthi R — MBBS MS MCH (vascular) — 9884 650945 — Sr Vascular Surgeon
Dr Salins R — MBBS MD — 87780 87742 — General Physician
Dr Praveena E — MBBS MS (ENT) — 9944 100443 — Sr ENT Surgeon

தவெக எம்.எல்.ஏ. ஒருவரால் மாவட்ட ஆட்சியருக்கே பாதுகாப்பு இல்லாத நிலை- கனிமொழி எம்.பி கண்டனம்



கள்ளக்குறிச்சி – 10 நவம்பர், 2026

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியருக்குத் தவெக சட்டமன்ற உறுப்பினர் அருள் விக்னேஷ் ஆபாசக் குறுஞ்செய்தி அனுப்பியதாகவும், மதுபோதையில் அவரது வீட்டுக்கே சென்று தொந்தரவு செய்ததாகவும், இதைத் தொடர்ந்து ஆட்சியருக்குத் தனிப் பாதுகாப்பு அதிகாரி நியமிக்கப்பட்டதாகவும் சமூக வலைதளங்களில் செய்திகள் வருகின்றன.

இந்தத் திறனற்ற தவெக ஆட்சியில், தமிழ்நாடு முழுவதும் கொலை, கொள்ளை என அடுத்தடுத்து நடக்கும் குற்றச்சம்பவங்களால் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டுவிட்டது. இப்போது தவெக எம்.எல்.ஏ. ஒருவரால் மாவட்ட ஆட்சியருக்கே பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. அப்படியிருக்க, தனிப் பாதுகாப்பு அதிகாரியை நியமிப்பதன் மூலம் மட்டும் தலைமைச் செயலாளர் அந்த ஆட்சியருக்கு என்ன பாதுகாப்பைக் கொடுத்துவிடப் போகிறார்?

முதலமைச்சர் அவர்களே, இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்?

பொம்டிலாவில் புத்தரின் புனிதப் பொருட்கள் கண்காட்சி: நவம்பர் 13-ம் தேதி வரை நடக்கிறது

சென்னை – 10 நவம்பர், 2026

புத்தரின் புனிதப் பொருட்கள், அருணாச்சலப் பிரதேச மாநிலம், பொம்டிலா பகுதிக்கு 2026 நவம்பர் 8-ம் தேதி வந்தடைந்தது. இங்கு புத்தரின் புனிதப் பொருட்கள் பொதுமக்களின் பார்வைக்காக நவம்பர் 13-ம் தேதி வரை வைக்கப்படுகிறது. இதற்கான ஏற்பாடுகள் மத்திய கலாச்சாரத்துறை அமைச்சகம், புதுதில்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகம், அருணாச்சலப் பிரதேச அரசு, சர்வதேச பவுத்த கூட்டமைப்பு சார்பில் செய்யப்பட்டுள்ளது.

தவாங்கில் இருந்து ஹெலிகாப்டர் மூலம், கொண்டுவரப்பட்ட புத்தரின் புனித பொருட்களுக்கு மத்திய கலாச்சாரத்துறை அமைச்சக அதிகாரிகள், அருணாச்சலப்பிரதேச அரசு அதிகாரிகள் உள்ளிட்டோர் வரவேற்பு அளித்தனர். இதைத்தொடர்ந்து காட்சிப்படுத்தப்பட்ட புத்தரின் புனிதப் பொருட்களை, முதல்நாளில் புத்த துறவிகள், மூத்தகுடிமக்கள் உள்ளிட்ட 4 ஆயிரம் பேர் பார்வையிட்டனர்.

பொம்டிலா பகுதியில் நடைபெறும் கண்காட்சியை தொடர்ந்து, அருணாச்சலப் பிரதேசத்தின் நம்சாய் பகுதியில் உள்ள புத்தர் கோயிலான கோல்டன் பகோடாவில் புத்தரின் புனிதப் பொருட்கள், பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட உள்ளன. இக்கண்காட்சி, 2026 நவம்பர் 14-ம் தேதி முதல் 20-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதைத்தொடர்ந்து, நவம்பர் 21-ம் தேதி அன்று புத்தரின் புனிதப் பொருட்கள் புதுதில்லியில் உள்ள தேசிய அருங்காட்சியகத்திற்கு மீண்டும் எடுத்துச் செல்லப்பட உள்ளன.

முன்னதாக, அருணாச்சலப் பிரதேச மாநிலம், தவாங்கில் நவம்பர் 7-ம் தேதி வரை நடைபெற்ற கண்காட்சியில் ஆயிரக்கணக்கான பக்தர்கள், புத்தரின் புனிதப் பொருட்களை பார்வையிட்டது குறிப்பிடத்தக்கது.



டோக்கியோ சர்வதேசத் திரைப்பட விழாவில் உலக அரங்கில் ஒலித்த ஒளிப்பதிவாளர், இயக்குநர் செழியனின் 'காகித மலர்'!

தயாரிப்பாளர் பிரேமா செழியன், மகள் அதிதா செழியன் பங்கேற்பு



சென்னை – 10 நவம்பர், 2026

ஒளிப்பதிவாளரும் இயக்குநருமான செழியன் அவர்கள் ஒளிப்பதிவு செய்து இயக்கிய 'காகித மலர்' (The Paper Flower) திரைப்படம், 39-வது டோக்கியோ சர்வதேச திரைப்பட விழாவின் Asian Future பிரிவில் உலகத் திரையிடலுக்காக (World Premiere) தேர்வு செய்யப்பட்டு, இரண்டு காட்சிகள் திரையிடப்பட்டன. இந்த உலகத் திரையிடலில் படத்தின் தயாரிப்பாளரான பிரேமா செழியன் மற்றும் சிங்கப்பூரில் கல்வி பயிலும் அவரது மகள் அதிதா செழியன் ஆகியோர் கலந்து கொண்டனர். திரையிடப்பட்ட இரண்டு காட்சிகளுமே பார்வையாளர்களால் (Housefull)நிரம்பி வழிந்தன. ஜப்பானிய ரசிகர்கள் படத்தை மிகுந்த ஆர்வத்துடன் கண்டு ரசித்தனர். படம் நிறைவடைந்ததும் அரங்கம் முழுவதும் பலத்த கைதட்டல்கள் ஒலித்தன. திரையிடலுக்குப் பின்னர் நடைபெற்ற கேள்வி-பதில் நிகழ்ச்சியில் பார்வையாளர்கள் பல்வேறு கேள்விகளை எழுப்பினர். அவற்றுக்குத் தமிழில் பிரேமா செழியனும், ஆங்கிலத்தில் அதிதா செழியனும் பதிலளித்தனர்.

நிகழ்ச்சியின் போது அவர்களின் பதில்கள் ஜப்பானிய மொழியிலும் மொழிபெயர்க்கப்பட்டன. 'காகித மலர்' திரைப்படம் குறித்து விழாவின் தேர்வுக் குழு உறுப்பினர்கள், திரைப்பட ரசிகர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் தெரிவித்த பாராட்டுகளும் கருத்துகளும் மிகுந்த நெகிழ்ச்சியை ஏற்படுத்தின. டோக்கியோ சர்வதேசத் திரைப்பட விழாவின் தேர்வுக் குழு உறுப்பினர் (Jury) கென்ஜி இஷிசாகா (Kenji Ishizaha) கூறியதாவது: "டிஜிட்டல் யுகத்தில் குறைந்த பட்ஜெட்டில்கூட மிகச் சிறந்த திரைப்படங்களை உருவாக்க முடியும். திரைப்பட உலகில் ரத்தினங்களைப் போன்ற அருமையான படைப்புகளை நாங்கள் கண்டிருக்கிறோம். அதற்கு ஒரு சிறந்த உதாரணம் செழியனின் 'காகித மலர்'. இந்தத் திரைப்படம் உலகத் தரத்தைக் கொண்ட படைப்பாக அமைந்துள்ளது. பொதுவாக இந்தியத் திரைப்படங்கள் என்றாலே பலரும் பாலிவுட் திரைப்படங்களைத்தான் நினைக்கிறார்கள். ஆனால், பாலிவுட்டைத் தாண்டியும் இந்தியாவில் பல்வேறு வகையான தனித்துவமான திரைப்படங்கள் உருவாகின்றன என்பதை உலக ரசிகர்களுக்குக் காட்டவே இந்தப் படத்தைத் தேர்வு செய்தோம். நாங்கள் எதிர்பார்த்ததைப் போலவே, இந்தப் படத்தைப் பார்த்து அனைவரும் ஆச்சரியமடைந்ததுடன், மிகவும் பாராட்டி ரசித்தனர். திரைப்பட விமர்சகர் கேட்டி ரைஃப்(Katie Rife), டோக்கியோ சர்வதேசத் திரைப்பட விழாவில் இனிமையான(Sweet), இலக்கிய நயம் மிக்க (Bookish),தமிழ் திரைப்படமான "காகித மலர்" (The Paper Flower) மற்ற திரைப்படங்களிலிருந்து தனித்துவமாகத் தெரிந்து(Stood out) எங்களது கவனத்தை ஈர்த்தது, என்று பாராட்டியுள்ளார். மேலும், 'காகித மலர்' திரைப்படத்தை ஜப்பான் மட்டுமின்றி, பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த திரைப்பட விநியோகஸ்தர்களும் திரையிடுவதற்கும் விநியோகிப்பதற்கும் ஆர்வம் தெரிவித்துள்ளனர். இந்தத் திரைப்படத்தில் பணி புரிந்த எடிட்டர் ஸ்ரீகர் பிரசாத், ஒலி அமைப்பாளர் தபஸ் நாயக், செழியனின் உதவியாளர்கள் பிச்சுமணி, ஆர்.பி. ராஜா, ராஜ்கிரண், ஜோசப் இருதயராஜ், பேச்சியப்பன், நடிகர் பராந்தக சோழன், நடிகை ஜனனி செண்பகா உள்ளிட்ட அனைவருக்கும், மற்றும் உயிரெழுத்து பதிப்பகம் சுதிர், அன்னம் பதிப்பகம் கதிர் மற்றும் பபாசி அமைப்பிற்க்கும் தயாரிப்பாளர் பிரேமா செழியன் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துள்ளார். மேலும், இந்த வெற்றியும், அங்கீகாரமும், பாராட்டுகளும், அனைத்துமே "எங்கள் அன்பிற்குரிய செழியன் அவர்களின் திரைப்பாதங்களில் சமர்ப்பிக்கிறோம்" என்றும் தெரிவித்துள்ளார். செழியனின் 'காகித மலர்' திரைப்படம் இனி பல்வேறு உலக நாடுகளிலும் தனது பயணத்தைத் தொடரவுள்ளது. அவரது கலைப்பயணம் உலகெங்கும் தொடர்ந்து ஒலிக்கட்டும்!

உச்சநீதிமன்றம் வரையறுத்த நேரத்தை மீறி சென்னையில் பட்டாசு வெடித்தது தொடர்பாக 148 வழக்குகள் உட்பட மொத்தம் 237 வழக்குகள் பதிவு

சென்னை – 10 நவம்பர், 2026

உச்சநீதிமன்ற ஆணை மற்றும் தமிழக அரசின் வழகாட்டுதல்கள்பேரில், தீபாவளியை முன்னிட்டு, சென்னை பெருநகரில் காலை 06.00 மணி முதல் 07.00 மணி வரையிலும், இரவு 07.00 மணி முதல் 08.00 மணி வரையிலும் என 2 மணி நேரம் மட்டும் பட்டாசுகள் வெடிக்க அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

அதன்பேரில், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் A.அமல்ராஜ், உத்தரவின்பேரில், காவல் உயரதிகாரிகள் அறிவுரையின்பேரில், அனைத்து காவல் நிலைய ஆய்வாளர்கள் மற்றும் காவல் ஆளிநர்கள் தங்களது காவல் நிலைய எல்லைக்குள் தொடர் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

அதன்பேரில், காவல் குழுவினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு நேற்று (08.11.2026) தீபாவளியை முன்னிட்டு கனம் உச்சநீதிமன்றம் அனுமதித்த நேரத்தை மீறி பட்டாசுகள் வெடித்தது தொடர்பாக 148 வழக்குகளும், உரிமம் இன்றி பட்டாசுகள் விற்பனை செய்தது தொடர்பாக 10 வழக்குகளும், அளவுக்கு அதிகமான சத்தத்தில் பட்டாசு வெடித்தது தொடர்பாக 79 வழக்குகளும் என மொத்தம் 237 வழக்குகள் பதிவு செய்து, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாம்பலம் பகுதியில் வீட்டில் வைத்திருந்த லேப்டாப் மற்றும் செல்போனை திருடிச் சென்ற வழக்கில் ஒருவர் கைது



சென்னை – 10 நவம்பர், 2026

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ராஜ்ஸ்ரீ, பெ/வ.21 என்பவர் 05.11.2026 அன்று சென்னை, தி.நகர், ராமேஸ்வரம் தெருவிலுள்ள அவரது அத்தை வீட்டிற்கு வந்து தங்கியிருந்ததாகவும், கடந்த 07.11.2026 அன்று இரவு அத்தை மகளை அழைத்து வர விமான நிலையம் சென்று, அத்தை மகளை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்ததாகவும், பின்னர் நேற்று (08.11.2026) விடியற்காலை, வீட்டின் மாடியிலுள்ள அறைக்கு சென்று பார்த்தபோது, அங்கு வைத்திருந்த இவரது லேப்டாப் மற்றும் செல்போனை யாரோ திருடிச் சென்றது தெரியவந்ததாகவும், உடனே மொட்டை மாடிக்கு சென்று பார்த்தபோது, ஒரு பெண் உட்பட 3 நபர்கள் மேற்படி லேப்டாப் மற்றும் செல்போனை திருடிக் கொண்டு தப்பியோடியதாகவும், மேற்படி 3 நபர்களை கண்டுபிடித்து தனது லேப்டாப் மற்றும் செல்போன் மீட்டு தரும்படியும் ராஜ்ஸ்ரீ என்பவர் R-1 மாம்பலம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகார் மீது வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

R-1 மாம்பலம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி திருட்டில் ஈடுபட்ட எதிரி ஜெயமுரளளி, வ/36, கிண்டி ரேஸ் கோர்ஸ், சென்னை என்பவரை நேற்று (08.11.2026) கைது செய்தனர்.

விசாரணையில் எதிரி ஜெயமுரளி துப்புரவு பணி செய்து வருவதும், இவர் அவரது நண்பர் மற்றும் தோழியுடன் சேர்ந்து மேற்படி திருட்டில் ஈடுபட்டதும் தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி ஜெயமுரளி விசாரணைக்குப் பின்னர் நேற்று (08.11.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும், இவ்வழக்கில் தொடர்புடைய தலைமறைவு எதிரிகளை காவல் குழுவினர் தேடி வருகின்றனர்.

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

பெத்லகேம் குடும்ப யூனிட்' வெற்றியைத் தொடர்ந்து, ரெஜின் எஸ். பாபுவின் மிஸ்டரி-த்ரில்லர் 'பௌமா' மற்றும் அமல் நீரதின் ஆக்ஷன்-க்ரைம் டிராமா 'டூக்ஸ்' ஆகிய படங்களை தென்னிந்திய மாநிலங்களில் விநியோகம் செய்கிறது ஃபியூச்சர் ரன்அப் ஃபிலிம்ஸ்

சென்னை – 10 நவம்பர், 2026 'பெத்லகேம் குடும்ப யூனிட்' (Bethlehem Kudumba Unit) திரைப்படத்தின் மாபெரும் திரையரங்கு வெற்றியைத் தொடர்ந்து, முன்னணி விநியோக நிறுவனமான ஃபியூச்சர் ரன்அப் ஃபிலிம்ஸ் தனது அடுத்த முக்கிய திரையரங்கு வெளியீட்டை அறிவித்துள்ளது. அட்வஸ் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள மிஸ்டரி-த்ரில்லர் திரைப்படமான 'பௌமா' (Bouma) மற்றும் அன்வர் ரஷீத் என்டர்டெயின்மென்ட் தயாரிப்பில் உருவாகியுள்ள ஆக்ஷன்-க்ரைம் டிராமா திரைப்படமான 'டூக்ஸ்' (Deux) ஆகிய இரண்டு பெரிதும் எதிர்பார்க்கப்படும் மலையாளத் திரைப்படங்களின் தென்னிந்திய திரையரங்கு விநியோக உரிமையை இந்நிறுவனம் அதிகாரப்பூர்வமாகப் பெற்றுள்ளது.

ஃபியூச்சர் ரன் ஃபிலிம்ஸ் நிறுவனத்தின் அனூப் குமார் மற்றும் அருண் நாராயணன் ஆகியோர், உள்ளடக்கத்திற்கு (Content-oriented) முக்கியத்துவம் அளிக்கும் தரமான திரைப்படங்களை பெருந்திரைக்குக் கொண்டு வருவதில் கவனம் செலுத்தி வருகின்றனர். இவர்களது நோக்கம் தமிழ்நாடு மட்டுமின்றி, அனைத்து தென்னிந்தியப் பகுதிகள் மற்றும் பான்-இந்தியா (Pan-India) அளவிலும் விரிவடைவதை இலக்காகக் கொண்டுள்ளது. இந்த உன்னதமான விரிவாக்கத்தின் கீழ், ஃபியூச்சர் ரன்அப் ஃபிலிம்ஸ் தனது வலுவான விநியோகக் கட்டமைப்பைப் பயன்படுத்தி, இத்திரைப்படங்களை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள பெருவாரியான ரசிகர்களிடம் கொண்டு சேர்க்கவுள்ளது.

'பௌமா' திரைப்படம் தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா மற்றும் பாண்டிச்சேரி ஆகியப் பகுதிகளிலும்; 'டூக்ஸ்' திரைப்படம் தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தெலங்கானா ஆகியப் பகுதிகளிலும் திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. ரெஜின் எஸ். பாபு எழுதி இயக்கியுள்ள 'பௌமா' திரைப்படத்தில் திலீஷ் போத்தன், சாகர் சூர்யா, வினீத் மற்றும் அதிதி பாலன் உள்ளிட்ட முன்னணி நட்சத்திரங்கள் நடித்துள்ளனர். கிறிஸ்டோ சேவியர் இசையமைத்துள்ள பின்னணி இசை, இந்த த்ரில்லர் திரைப்படத்திற்கு கூடுதல் விறுவிறுப்பையும் மர்மத்தையும் சேர்க்கிறது. அமல் நீரத் இயக்கியுள்ள 'டூக்ஸ்' திரைப்படம், நஸ்லென், குஞ்சாக்கோ போபன், டொவினோ தாமஸ், சௌபின் ஷாஹிர், ஷரஃபுதீன், ஸ்ரீநாத் பாசி மற்றும் ரஜிஷா விஜயன் எனப் பெரும் நட்சத்திரப் பட்டாளத்துடன் ஒரு ஸ்டைலிஷான ஆக்ஷன்-க்ரைம் கதையாக உருவாகியுள்ளது. இதற்கு உன்னி ஆர். வசனங்களை எழுத, கிறிஸ்டோ சேவியர் பாடல்களையும் பின்னணி இசையையும் அமைத்துள்ளார்.



இது குறித்து அனூப் குமார் கூறுகையில், "'பெத்லகேம் குடும்ப யூனிட்' திரைப்படத்திற்கு கிடைத்த அமோக வரவேற்பிற்குப் பிறகு, அட்வஸ் ஃபிலிம்ஸ் மற்றும் அன்வர் ரஷீத் என்டர்டெயின்மென்ட் ஆகிய நிறுவனங்களுடன் இணைந்து இந்த இரண்டு சிறந்த திரைப்படங்களை கேரளாவைத் தாண்டி பிற மாநில ரசிகர்களுக்கும் கொண்டு சேர்ப்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இயக்குநர் ரெஜின் எஸ். பாபு, சிறந்த நடிகர்கள் மற்றும் கிறிஸ்டோ சேவியரின் அசத்தலான இசையோடு 'பௌமா' என்ற ஒரு அசாத்தியமான மிஸ்டரி-த்ரில்லரை உருவாக்கியுள்ளார். அதேபோல், அமல் நீரதின் 'டூக்ஸ்' திரைப்படம் பிரம்மாண்ட நட்சத்திரப் பட்டாளத்துடன் உயர்தர ஆக்ஷன்-க்ரைம் டிராமாவை திரையில் கொண்டு வருகிறது. ஆந்திரா, தெலங்கானா, தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் பாண்டிச்சேரி ஆகிய பகுதிகளில் உள்ள திரையரங்கு ரசிகர்களுக்கு இது ஒரு விறுவிறுப்பான பொழுதுபோக்கு அனுபவமாக இருக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்," என்றார்.

இத்திரைப்படங்களின் அதிகாரப்பூர்வ வெளியீட்டுத் தேதிகள், ட்ரெய்லர் வெளியீடுகள் மற்றும் திரையரங்குகளின் முழுமையான பட்டியல்கள் ஆகியவை விரைவில் அதிகாரப்பூர்வ விநியோக தளங்கள் மூலம் அறிவிக்கப்படும்.

எம்.கே.பி. நகர் பகுதியில் வீட்டின் முன் நிறுத்தியிருந்த இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற நபர் கைது. இருசக்கர வாகனம் மீட்பு.



சென்னை – 10 நவம்பர், 2026 சென்னை, வியாசர்பாடி, தமோதரன் நகர், 2வது தெருவில் வசித்து வரும் கார்த்திக், வ/37, என்பவர் பெயிண்டராக வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 04.11.2026 அன்று இரவு வேலை முடித்து அவரது ஆக்டிவா இருசக்கர வாகனத்தை வீட்டின் முன் நிறுத்திவிட்டு, மறுநாள் (05.11.2026) காலை வந்து பார்த்தபோது, யாரோ அவரது இருசக்கர வாகனத்தை திருடிச் சென்றது தெரியவந்ததாகவும், மேற்படி திருட்டில் ஈடுபட்ட நபரை கண்டுபிடித்து தனது இருசக்கர வாகனத்தை மீட்டு தரும்படியும் கார்த்திக் என்பவர் P-5 எம்.கே.பி நகர் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகார் மீது வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

P-5 எம்.கே.பி. நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி இருசக்கர வாகனத்தை திருடிச் சென்ற அதே பகுதியைச் சேர்ந்த எதிரி முகேஷ் (எ) பல்சாமான், வ/21, தாமோதரன் நகர் 3வது தெரு, வியாசர்பாடி, சென்னை என்பவரை நேற்று (08.11.2026) கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் ஆக்டிவா இருசக்கர வாகனம் மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி முகேஷ் (எ) பல்சாமான் மீது ஏற்கனவே ஒரு கொலை முயற்சி, திருட்டு, வழிப்பறி வழக்குகள் உட்பட சுமார் 7 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி முகேஷ் (எ) பல்சாமான் விசாரணைக்குப் பின்னர் நேற்று (08.11.2026) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

உத்தராகண்ட் நிறுவன தினத்தையொட்டி அம்மாநில மக்களுக்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்துள்ளார்

சென்னை – 10 நவம்பர், 2026 உத்தராகண்ட் நிறுவன தினத்தையொட்டி, அம்மாநில மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி தமது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்தார்.

தேவ பூமியான உத்தராகண்ட் ஆன்மீக பாரம்பரியத்துடனும், சிறந்த இயற்கை அழகுடனும் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் கூறினார். கண்ணைக்கவரும் மலைப்பகுதிகள், புனித நதிகள், போற்றக்கூடிய புனிதத் தலங்கள், மகத்துவம் மிக்க கலாச்சாரப் பாரம்பரியம் ஆகியவை அம்மாநிலத்தின் சிறப்பு வாய்ந்தவை என்றும் அவர் தெரிவித்தார்.

கடினமாக உழைக்கக்கூடிய, திறமைமிக்க, முற்போக்கு சிந்தனையுடைய மாநில மக்களின் தீவிர பங்களிப்புடன் உத்தராகண்ட் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியின் உச்சத்தை எட்டுவதாக மோடி கூறினார். அம்மாநிலம் தொடர்ந்து விரைவான முன்னேற்றத்தை அடையும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர், அம்மாநில மக்களிடையே மகிழ்ச்சி, அமைதி, செழுமை ஆகியவை பெருகட்டும் என்று வாழ்த்து தெரிவித்தார்.

சாமானியரை அடித்துக் கொலை மிரட்டல் விடுத்த TVK MLA - துணை சபாநாயகர் ரவி சங்கர் மீது நடவடிக்கை எடுக்காமல் மூடி மறைக்கும் Dummy CM விஜய்

சென்னை – 10 நவம்பர், 2026 பண்டிகை தினத்தன்று நடந்த 11 கொலைகளைத் தடுக்க துப்பின்றி.. புகார் சொல்லும் பொது மக்களை மிரட்டி வரும் தவெக அரசு

வெத்து வசனம் பேசி வண்டி ஓட்டி வரும் அட்டக்கத்தி CM விஜய் வாயைத் திறந்து பேசுவாரா.?

துறையூர் தொகுதியில் நிலவி வரும் குடிநீர் பிரச்சினை பற்றி புகார் அளித்தும் தவெக அரசு நடவடிக்கை எடுக்காததால், துறையூர் தொகுதி த.வெ.க சட்டமன்ற உறுப்பினரும், துணை சபாநாயகருமான ரவிசங்கிரிடம் புகார் அளிக்க சென்ற கண்ணபிரான் காலனியைச் சேர்ந்த கார்த்திக் குமார் என்கிற சாமானியரை, கடுமையாக தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளார் ரவி சங்கர். அதுபற்றி கார்த்திகுமார் புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் புகார் தாரரை மிரட்டி மூடி மறைக்க துடிக்கிறார் சோப்ளாங்கி CM விஜய்.

ரீல்ஸ்சிலும், சமூக ஊடகங்களிலும் மட்டுமே அரசை நடத்தி வரும் வெத்து த.வெ.க அரசு இதை மூடி மறைக்க, பாதிக்கப்பட்டவரை மிரட்டி 6 take கள் வீடியோ எடுத்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் சொல்லியபடி பேசாவிட்டால் குடும்பத்தையே கொன்று விடுவோம் என கார்த்திக் குமாரை மிரட்டி உள்ளனர். இது அத்தனைக்கும் தவெக காவல்துறையும் உடந்தையாக இருந்துள்ளது வெட்கக் கேடு. மணச்சநல்லூர் காவல் ஆய்வாளர் கிருபாநிதி என்பவர் தன்னை மிரட்டி துணை சபாநாயகர் வீட்டிற்கு அழைத்து சென்று வீடியோ எடுத்தாக புகார்தாரர் கூறி உள்ளார். இதுதான் தவெக அரசின் காவல்துறை லட்சணம். இரண்டு நாட்கள் முன்பு மதுவிலக்கு போலீசாரே கஞ்சாவை மறைத்து வைத்து மதுக்கடைக்கு எதிராக போராடியவரை கைது செய்ய திட்டம் போட்டு கையும் களவுமாக சிக்கினார். அவர் மீதும் நடவடிக்கை எடுக்கவில்லை.

காவல்துறை உங்கள் நண்பன் என்பார்கள் ஆனால் இன்று தவெக ஆட்சியில் காவல்துறை பொது மக்களின் வில்லனாக மாறி உள்ளது.

பண்டிகை தினத்தன்று பதினோரு கொலைகள் நடந்துள்ளன, அச்சமூட்டும் கொலை செய்திகள் இன்னும் வந்து கொண்டே இருக்கின்றன. அதனை தடுக்க துப்பில்லாத தவெக அரசின் காவல்துறை தவெகவின் அடியாளாக மாறி பொது மக்களை மிரட்டி வருகிறது.

மாற்றம் மாற்றம் என சொல்லி மக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்த கேடு கெட்ட சக்தி தற்போது அவர்களுக்கு வாக்களித்தவரையே அடித்து துன்புறுத்தி உள்ளது.

தொகுதி பிரச்சனைகளை சட்டமன்ற உறுப்பினர்களிடம் போய் சொல்லுங்கள், அவர்கள் எல்லை சாமி என்றெல்லாம் அள்ளி வீசினார் Dummy CM. தற்போது விஜய் பேச்சை நம்பி போய் பிரச்சனையை சொன்னவரை கடுமையாக தாக்கி அவமானப்படுத்தி அனுப்பியுள்ளார் TVK MLA ரவி சங்கர். அதோடு பாதிக்கப்பட்டவரையே மிரட்டி அவர்கள் எழுதி கொடுத்த Script யை பேச வைத்து ஒரு விடியோ எடுத்துள்ளனர். புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் புகார் அளித்தவரை மிரட்டி புகாரை திரும்ப பெற கூறி உள்ளனர்.



மக்கள் பிரச்சனைகளை தீர்த்துவைக்க முடியாவிட்டாலும் பரவாயில்லை, அவர்கள் கோரிக்கை வைத்தாலே தாக்குவது எந்த ஜனநாயகத்திலும் இதுவரை நடக்காத ஒன்று.

ரசிகர் மன்ற டிக்கெட் பிரச்சனைகள் போல மக்கள் பிரச்சனையை திமிர்த்தனமாக கையாண்டு தாக்குவது, அந்த நபரை மிரட்டி பொய் வாக்குமூலம் தர சொல்வது இது தான் நீங்கள் தமிழ்நாட்டுக்கு தரும் மாற்றமா சோப்ளாங்கி CM ?

Extended weekend -ல் offline mode போவதை விட்டு உங்க M.L.A க்கள் மக்களை நடத்தும் விதத்தை முதலில் பாருங்கள்.

தாக்குதல் நடத்திய தவெக எம்.எல்.ஏவும், துணை சபாநாயகருமான ரவிசங்கர், மிரட்டலுக்கு துணை போன காவல்துறை அதிகாரிகள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுத்து, கைது செய்யுங்கள்.

வெத்து வசனம் பேசி வண்டி ஓட்டி வரும் அட்டக்கத்தி CM sir இந்த சம்பவத்திற்காவது வாயை திறந்து பேசுவீர்களா ? நடவடிக்கை எடுப்பீர்களா ?

இந்திய ரயில்வே சார்பில் 1 லட்சம் இடங்களில் தூய்மைப் பணி செய்து சாதனை

சென்னை – 10 நவம்பர், 2026 இந்திய ரயில்வே துறை சார்பில், 2026 அக்டோபர் 2 முதல் 31- ம் தேதி வரை தூய்மைப் பணி நடைபெற்றது. சிறப்பு தூய்மை இயக்கம் 6 மூலம், தூய்மைப் பணி, பழைய கழிவுகளை அகற்றுதல், மின் கழிவு மேலாண்மை, கோப்புகள் மேலாண்மை உள்ளிட்டவை வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளதாக ரயில்வே துறை தெரிவித்துள்ளது. ரயில் நிலையங்கள், ரயில்வே அலுவலகங்கள் என 1 லட்சத்துக்கும் மேற்பட்ட இடங்களில் தூய்மைப்பணி நடைபெற்றது. பழைய கழிவுப்பொருட்கள் விற்பனை மூலம் 628.49 கோடி ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரைத்த மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது. ரயில்வே ஊழியர்களின் ஒத்துழைப்புடன் இந்த தூய்மைப்பணி சாத்தியமானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

பீரீமியம் கிரெடிட் கார்டு வழங்குவதாக கூறி, ஆன்லைன் மூலம் ரூ.17,60,440/- அபகரித்த வழக்கில், சென்னை கிழக்கு மண்டல சைபர் கிரைம் போலீசாரால் ஒருவர் மேற்கு வங்காளத்தில் கைது.



சென்னை – 10 நவம்பர், 2026 சென்னை, நுங்கம்பாக்கம் பகுதியில் வசித்து வரும் கீர்த்திவாசன், வ/34, என்பவரை கடந்த 23.04.2026 அன்று செல்போனில் தொடர்பு கொண்ட ஒரு நபர், உங்களது கிரெடிட் ஸ்கோர் அடிப்படையில் உங்களுக்கு பிரீமியம் கிரெடிட் கார்டு வழங்க உள்ளதாகவும், அதில் நிறைய சலுகைகள் உள்ளதாகவும் என ஆசை வார்த்தைகள் கூறி, வாட்சப் மூலம் ஒரு Link அனுப்பி, அதில் வங்கி கணக்கு உள்ளிட்ட விபரங்களை உள்ளீடு செய்தால் விரைவில் பிரீமியம் கிரெடிட் கார்டு வழங்குவதாக கூறியதாகவும், இதனை நம்பிய கீர்த்திவாசன் அந்த Link ல் அவரது வங்கி கணக்கு மற்றும் பிற விபரங்களை பதிவு செய்ததாகவும், பின்னர் அந்த நபர், மறுநாள் (24.06.2026) ஒரு செல்போனை கீர்த்திவாசனுக்கு அனுப்பி, 2 step Verifucationக்காக அந்த செல்போனில் உங்களது சிம் கார்டை பொருத்துமாறு கூறியதின்பேரில், கீர்த்திவாசன் புதிய செல்போனில் அவரது சிம் கார்டை பொருத்திய சிறிது நேரத்தில் அவரது வங்கி கணக்கில் இருந்து ரூ.10 இலட்சம் பணம் மற்றும் அவரது கிரெடிட் கார்டு மூலம் ரூ.7,60,440/- ஆன்லைன் பணபரிவர்த்தனை என மொத்தம் ரூ.17,60,440/- அபகரித்தது தெரியவந்ததாகவும், மேற்படி மோசடி செய்த நபரை கண்டுபிடித்து, தனது பணத்தை மீட்டுத் தருமாறும் கீர்த்திவாசன் தேசிய சைபர் கிரைம் புகார் இணையத்தில் புகார் பதிவு செய்து பின்னர் சென்னை பெருநகர காவல், கிழக்கு மண்டல சைபர் கிரைம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், வழக்குப் பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

கிழக்கு மண்டல சைபர் கிரைம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் வங்கி கணக்கு விவரங்கள் மற்றும் செல்போன் எண்களை கொண்டு தீவிர விசாரணை செய்ததில் இவ்வழக்கில் தொடர்புடைய எதிரி மேற்கு வங்காளம் மாநிலத்தில் பதுங்கி இருப்பது தெரியவந்ததின்பேரில், காவல் குழுவினர் மேற்குவங்காளம் மாநிலம் சென்று, அங்குள்ள காவல் நிலைய போலீசார் உதவியுடன் கண்காணித்து, மேற்படி மோசடியில் தொடர்புடைய எதிரி அப்புல் உசேன் ஷேக், வ/26, நவ்தா, முர்ஷிதாபாத், மேற்கு வங்காளம் மாநிலம் என்பவரை 06.11.2026 அன்று கைது செய்து, முர்ஷிதாபாத் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, உரிய சட்ட நடவடிக்கைகளுடன் எதிரி சென்னைக்கு அழைத்து வரப்பட்டார்.

சென்னைக்கு அழைத்து வரப்பட்ட எதிரி அப்புல் உசேன் ஷேக் விசாரணைக்குப் பின்னர் நேற்று (08.11.2026) சைதாப்பேட்டை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

எஸ்பிளனேடு பகுதியில் நடந்து சென்ற நபரை தாக்கி பணம் பறித்துச் சென்றவர் கைது. பணம் ரூ.500/-மீட்பு.



சென்னை – 10 நவம்பர், 2026 சென்னை, புதுப்பேட்டை, லேங்ஸ் கார்டன் தெருவில் வசித்து வரும் புருஸ்தம் கோராய், வ/23, என்பவர் தனியார் கம்பெனியில் பேக்கிங் வேலை செய்து வருவதாகவும், இவர் கடந்த 06.11.2026 அன்று மாலை அவரது நண்பருடன் வேலை முடித்து எஸ்பிளனேடு, போஸ்ட் ஆபிஸ் தெரு அருகே, நடந்து சென்றபோது, அங்கு நின்று கொண்டிருந்த அடையாளம் தெரியாத நபர் அவர்களை வழிமறித்து மது வாங்க பணம் கொடு என மிரட்டியதாகவும், அதற்கு புருஸ்தம் கோராய் தன்னிடம் பணம் ஏதும் இல்லை என கூறியபோது, அந்த நபர் மற்றும் அவருடன் இருந்த 3 நபர்கள் சேர்ந்து அவர்களை தாக்கி, புருஸ்தம் கோராய் கையில் வைத்திருந்த பணம் ரூ.1,000/-ஐ பறித்து கொண்டு தப்பிச் சென்றதாகவும், தாக்குதலில்.காயமடைந்த புருஸ்தம் கோராய் ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேற்படி சம்பவம் குறித்து B-2 எஸ்பிளனேடு குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது வழக்குப் பதிவு செய்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

B-2 எஸ்பிளனேடு குற்றப்பிரிவு காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர், சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் தொடர்புடைய சஞ்சய், வ/19, மூர் தெரு, மண்ணடி, சென்னை என்பவரை 07.11.2026 அன்று கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் பணத்தில் செலவு செய்தது போக மீதி பணம் ரூ.500/- மீட்கப்பட்டது.

விசாரணையில் எதிரி சஞ்சய் ஏற்கனவே, வழிப்பறி வழக்கு உட்பட 4 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி சஞ்சய் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

மேலும் குற்றச் சம்பவத்தில் ஈடுபட்ட தலைமறைவு எதிரிகளை காவல் குழுவினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

மத்திய மின்துறை அமைச்சகம் சார்பில் நடைபெற்ற தூய்மை, குறைத்தீர்ப்பு பணிகள்

சென்னை – 10 நவம்பர், 2026 மத்திய மின்துறை அமைச்சகம் சார்பில், சிறப்பு தூய்மை இயக்கம் 6 மூலம், 2026 அக்டோபர் 2 முதல் 31- ம் தேதி வரை தூய்மைப்பணி, குறைதீர்ப்பு பணிகள் நடைபெற்றன. 342 இடங்களில் தூய்மைப்பணி நடைபெற்ற நிலையில், மின்னணு கழிவுப்பொருட்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ. 15.47 லட்சம் வருவாய் கிடைத்தது. ஆவணங்கள் மேலாண்மை மூலம், 13,282 கோப்புகள் அப்புறப்படுத்தப்பட்டன. இதேபோல் 34,525 மின்னணு கோப்புகள் நீக்கப்பட்டன.

இதுதவிர, பிரதமர் அலுவலகம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்த மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டது. சமூக ஊடகங்கள் வாயிலாக சுத்தம், சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தூய்மைப்பணி தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக அடைந்தாக மத்திய மின்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடற்சார் பயிற்சிக்காக மஸ்கட் சென்றடைந்த இந்திய கடற்படைக் கப்பல் சூரத்

சென்னை – 10 நவம்பர், 2026 இந்திய கடற்படைக் கப்பலான சூரத், ஓமன் நாட்டில் உள்ள மஸ்கட் துறைமுகத்தை 2026 நவம்பர் 8-ம் தேதி சென்றடைந்தது. இந்தியா, ஓமன் இடையேயான கடல்சார் பயிற்சியின் 15-வது பதிப்பிற்காக இந்தப் பயணத்தை சூரத் கப்பல் மேற்கொண்டுள்ளது. இந்திய கடற்படை, ஓமனின் ராயல் கடற்படை ஆகியவை இணைந்து கடல்சார் பயிற்சியை மேற்கொள்கின்றன. கடற்சார் பயிற்சி குறித்த ஆலோசனை, விளையாட்டு நிகழ்ச்சிகள், இரு நாட்டு வீரர்களும் பரஸ்பரம் தங்களது பயிற்சிகள் குறித்து கலந்துரையாடும் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. இது இருநாட்டு வீரர்களின் பயிற்சித் திறனை மேம்படுத்தவும், ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளவும் நல்வாய்ப்பாக அமையும். கடற்சார் பயிற்சி தொடர்பாக இந்தியா, ஓமன் இடையே நீண்டகால நட்புறவு நீடித்து வருகிறது. இதை மேலும் வலுப்படுத்த இந்த பயிற்சி உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது. பிராந்தியங்களின் பாதுகாப்பு, வளர்ச்சிக்கான பரஸ்பர முன்னேற்றம் என்ற இந்திய அரசின் தொலைநோக்கு பார்வைக்கு செயல்வடிவம் கொடுக்கும் விதமாக இந்த பயிற்சி அமையும் எனவும் கூறப்பட்டுள்ளது. 2025 நவம்பர் 24-ம் தேதி அன்று நடைபெற்ற ராணுவ இணை கூட்டுக்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு இந்தியா-ஓமன் இடையேயான இந்த கடற்சார் பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொலைத்தொடர்பு இணைப்பு (துறைமுகக் கட்டணங்கள்) (மூன்றாவது திருத்தம்) ஒழுங்குமுறைகள், 2026 வெளியிடப்பட்டுள்ளது

சென்னை – 10 நவம்பர், 2026 தொலைத்தொடர்பு இணைப்பு (துறைமுகக் கட்டணங்கள்) (மூன்றாவது திருத்தம்) ஒழுங்குமுறைகள் 2026- ஐ இந்திய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் இன்று வெளியிட்டது.

இது 2027 ஜனவரி 1 முதல் அமலுக்கு வருகிறது. தொலைத்தொடர்பு இணைப்பு என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தொலைத்தொடர்பு கட்டமைப்புகளை இணைக்கக்கூடிய தொழில்நுட்ப, செயல்பாடு, வர்த்தக ரீதியிலான ஏற்பாடுகளைக் குறிக்கும்.

திருத்தப்பட்ட ஒழுங்குமுறையின் முக்கிய அம்சங்கள்:

ஐபி போர்ட்டுகளுக்கான அங்கீகாரம்:

போர்ட் என்ற வரையறை பழைய இ- 1 போர்ட்டுகள், ஐபி போர்ட்டுகள் இரண்டையும் உள்ளடக்கும் வகையில் திருத்தப்பட்டுள்ளது.

ஆண்டு ஐபி போர்ட் கட்டணங்களுக்கான உச்சவரம்பு:

ஒரு ஜிபிபிஎஸ் ஐபி போர்ட்டுக்கு ரூ. 5.6 லட்சம், 10 ஜிபிபிஎஸ் ஐபி போர்ட்டுக்கு ரூ. 42.3 லட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN, Director - Business Development
+91 9360136897 / +91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in | business@jmrgroup.org